# நிகழ்த்துதலின் இடைவேளைகள்

**முனைவர் லீமா மெட்டில்டா. அ**
**உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை , கேரளப் பல்கலை கழகம்,**
**திருவனந்தபுரம் – 695581**

**14**

**ஆய்வு நோக்கம் :**

நாட்டார் நிகழ்த்துக்கலைகளில் இடம்பெறும் இடைவேளைகளை அடையாளம் காணுதல், காரணங்களைத் தொகுத்தல்.

**ஆய்வுச் சுருக்கம்:**

பதிவு செய்யப்பட்ட நிகழ்வுகளை விட நேரடியாக நீண்ட நேரம் நடைபெறும் நிகழ்வுகளுக்கு இடைவேளை மிக அவசியம். மரபாக நிகழ்த்தப்பெறும் நாட்டார் நிகழ்த்துகலைகள் இரவு தொடங்கி விடியும் வரை நிகழ்த்தப் பெறுதல் இயல்பு. பல இடங்களில் நிகழ்த்துதலுக்கான நேரம் ஈடுபாடற்ற சமக்கால சமூகச் சூழலால் குறைக்கப்பட்டு விட்டது. எனினும் மரபு என்னும் நிலையில், சமயச் சடங்குகள் சார்ந்த பல்வேறு நிகழ்த்துக்கலைகள் இருக்கின்றன. இவற்றுடன் சமூகம் விரும்பியும் விரும்பாமலும் தன்னை இணைத்துக் கொண்டு இயங்க வேண்டிய சூழலும் உருவாகியுள்ளது. ஆடல், பாடல், கூத்து, நாடகம், இசை என நாட்டார் கலைகளை வகைப்படுத்தலாம். இங்ஙனம் நிகழ்த்தப்பெறும் நாட்டார் கலைகளில் இடைவேளைகளின் பங்களிப்பு, அவை ஏற்படுவதற்கான இயற்கை மற்றும் செயற்கைச் சூழல்கள், இடைவேளைகளை இட்டு நிரப்பும் செயல்பாடுகள் என்பன பற்றி இக்கட்டுரை அமைகிறது. குறிப்பாக கூத்து, நாடகம், கதை சொல்லல் முறையிலமைந்த பாடல்கள், கதைப்படல்கள் என்று நீண்ட கதையமைப்பைக் கொண்ட நாட்டார் நிகழ்த்துதல்களில் உண்டாகும் இடைவேளைகள், அவ்விடைவேளைகளை இட்டு நிரப்பும் செயல்பாடுகள், இடைவேளையின்மை என்று கட்டுரையின் பொருண்மை மூன்றாகப் பகுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கேரள மாநிலம் பாலக்காடு மாவட்டத்தில் நிகழ்த்தப் பெறும் சில நாட்டார் நிகழ்த்துக்கலைகள் இக்கட்டுரைக்கு முதன்மைச் சான்றுகளாக அமைந்துள்ளன.

**திறவுச் சொற்கள் :** பாசில், பபூன், இன முறை நிகழ்த்துனர், தெறிப்பாட்டு, பொறாட்டு நாடகம்

**முன்னுரை :**

உடலுக்கும் மனதுக்கும் மகிழ்வைத் தரும் கலைகள் மனித இனத்தை பிற உயிரினங்களிலிருந்து வேறுபடச் செய்வதில்/ வேறுபடுத்திக் காட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை அனைத்தும் உள்ளடங்கிய தொகுதியை நாட்டார் கலைகள், செவ்வியல் கலைகள் என்று வகைமைப்படுத்திக் கொள்ளுதல் எளிய புரிதலுக்குத் துணை செய்யும். இவ்வகைமை இடச்சுழல், நிகழ்த்துமுறைமை, நிகழ்த்துவோர், பார்வையாளர்கள் என்னும் அடிப்படையில் அமைகின்றன. "நாட்டார் வழக்காறுகள் பண்டைய சமூகத்தின் எச்சங்களை சுமந்து கொண்டிருக்கும் பாசில் (Fossil) அல்ல. மாறாக, அது உயிர்த்துடிப்புள்ளது. புதிது புதிதாகத் தோன்றும் தன்மையது"

(2005: 10) என்கிறார் ஆ. சிவசுப்பிரமணியன். இவற்றுள் நாட்டார் கலைகளும் அடக்கம். கலைகளை பொதுவாக நிகழ்த்துக்கலைகள், நிகழ்த்தாக்கலைகள் என இருவகைமைக்குள் அடக்கலாம். கட்டிடக்கலை, ஓவியக்கலை, சிற்பக்கலை என்பனவற்றை நிகழ்த்தாக்கலைகள் என்றும் கூத்து, நாடகம், ஆட்டம், பாடல், இசை என்பனவற்றை நிகழ்த்துக்கலைகள் என்றும் பிரித்துக் கொள்ளலாம்..

**இடைவேளை :**

இயங்குதல் என்பது மாறுதலின் அல்லது வளர்ச்சியின் அடிப்படை. உலகில் உள்ள பொருள்கள் யாவும் தொடர்ந்து இயங்கிக் கொண்டே இருக்கின்றன. அத்தகைய தொடர் இயக்கச் சூழலில் ஓய்வு என்பது இன்றியமையாததாகிறது. மனித சமூகம் தொடங்கி உலகிலுள்ள பொருள்கள் அனைத்துமே தொடர்ந்து இயங்குதலில் செயலற்றுப் போகும் சில சூழல்கள் அவ்வப்போது ஏற்படுவதுண்டு. இதனைத் தவிர்க்க அல்லது கூடுதல் பலத்துடன் செயல்பட அவ்வப்போது சில ஓய்வு வேளைகள் குறுகியதாகவும் நீண்டதாகவும் தேவைப்படுகின்றன. அவ்வகைல் உறக்கம் என்பதை அனைத்து உயிரிகளுக்கும் புத்துணர்வை அளிக்க வல்ல ஓய்வு என்று கொள்ளலாம். அதேபோன்று நிகழ்த்தப்பெறும் கலைகளிலும் ஓய்வு நேரங்கள் அவ்வப்போது தேவைப்படுகின்றன. இவற்றை 'இடைவேளைகள்' என்று அடையாளப்படுத்தலாம். திரைப்படங்களில் தவிர்க்க இயலாத கூறான இடைவேளை கதையின் திருப்புமுனையை உருவாக்கும் மிக முக்கியக் கூறாகும்.

**நாட்டார் நிகழ்த்துக்கலைகளில் இடைவேளை:**

இந்தியா போன்ற பன்முகத்தன்மை கொண்ட நாட்டில் வாழும் மக்கள் பல்வேறு சமயங்களை பின்பற்றுபவர்களாக உள்ளனர். அவ்வாறு நிகழ்த்தப் பெறும் நாட்டார் கலைகளில் பெரும்பான்மை சமயம் சார்ந்தே நிகழ்த்தப் பெறுகின்றன. சமய ஒட்டுதலோடு நிகழ்த்தப் பெறும் நாட்டார் கலைகள் பல சடங்கு முறைகளோடு பின்னிப்பிணைந்து கிடக்கின்றன. எனவே இவை நிகழ்த்தப் பெறும் காலம் நீண்டதாக இருக்கின்றது. இத்தகு நீண்ட நிகழ்த்துதல்களில் இடைவேளைகள் அவ்வப்போது தேவைப்படுகின்றன. அது பார்வையாளர்களுக்கும் நிகழ்த்தினர்களுக்கும் தேவைப்படும் சூழலில் இயல்பாக உருவாகின்றன.

**நிகழ்த்துனர் சார்ந்த இடைவேளைகள் :**

தொடர்ச்சியான நிகழ்த்துதல்களில் பல்வேறு கதை மாந்தர்கள் இடம்பெறுதல் இயல்பு. சமயம் சார்ந்த கதை சொல்லல்களில் வரும் கதை மாந்தர்கள் யாவரும் கனதியான ஒப்பனைகளையும் ஆடை அணிகலன்களையும் கொண்டவர்களாக இருப்பர். தொழில் முறை சார்ந்த நிகழ்த்துனர்கள் தங்களுக்குத் தேவையான ஒப்பனைகளை சுயமாகவே செய்து கொள்வர். அல்லாமல் அந்தந்த ஊர்களைச் சார்ந்த இன முறை நிகழ்த்தனார்களுக்கு ஒப்பனையாளரின் உதவி தேவைப்படுகிறது. ஒன்றோ இரண்டோ ஒப்பனையாளர்களை கொண்ட குழுவில் அடுத்தடுத்து வரும் கதை மாந்தர்கள் தயாராவதற்கு தாமதம் ஏற்படும் பொழுது இடைவேளை ஏற்படுகிறது.

ஒரே நிகழ்த்துனர் பல கதை மாந்தர்களாக - வனத்தில் வேட்டைக்காரனாக தோன்றும் அரசன் அடுத்த காட்சியில் அரண்மனையில் அரசனாகத் தோன்ற வேண்டுமாயின் உடைகளை, ஒப்பனைகளை மாற்ற வேண்டியுள்ளது. கதையின் மிக முக்கிய கதை மாந்தர் அரங்கிற்கு வரும் வேளையில் பார்வையாளர்களிடையே ஆர்வத்தைத் தூண்ட ஒரு சிறு இடைவேளை

உருவாக்கப்படுகிறது. அரங்கு அடிக்கடி திரையால் மூடுப்படுவதும் பின்பு திறக்கப்படுவதும் இந்நோக்கம் கருதியே.

**அனிச்சை செயல்கள் :**

நாட்டார் கலைகளில் பல பொதுவெளிகளில், தற்காலிக அரங்கில் அல்லது அரங்கின்றி நிகழ்த்தப்பெறுகின்றன. முறையான மேடை அமைப்பு என்பது மிகக் குறைவு. இச்சூழலில் திடீரென பெய்யும் மழை போன்ற அனிச்சை செயல்களால் நிகழ்த்துக்கலைகளில் எதிர்பாராத சிறிய அல்லது பெரிய இடைவேளைகள் உருவாகின்றன. கதை மாந்தர்கள்/நடிகர்கள் மது அருந்துதல், திடீர் கலவரங்கள் ஏற்படுதல் போன்றவற்றால் கூட நீண்ட அல்லது குறுகிய இடைவேளைகள் ஏற்படுவது இயல்பு.

**சமயம் சார்ந்த சடங்குகளால் ஏற்படும் இடைவேளைகள்:**

நாட்டார் நிகழ்த்து கலைகள் பலவும் சமயம் சார்ந்தவை. சமயச்சார்புடைய கலைகளில் சமயத்தை பரப்ப/ வளர்த்த பரிகாரம், நேர்ச்சை என்பன நிகழ்த்தப் பெறுகின்றன. இவை நிகழ்த்துதல்களின் இடையிடையே திட்டமிடப்பட்ட இடைவேளைகளில் செய்யப்படுகின்றன. கூத்துக்களில் முக்கிய கதை மாந்தர் அரங்கில் தோன்றும் பொழுது அவருக்கு மாலை அணிவித்தல், தெய்வமாக மாறக்கூடிய காட்சியில் நிகழ்த்துனரின் பாதங்களைக் கழுவி மரியாதை செய்தல், நேர்த்திக் கடன்களைச் செய்தல் என்னும் சடங்குகளில் பார்வையாளர்களாக உள்ள அந்தந்த ஊர் மக்கள் ஈடுபடுவர்.

**நிகழ்த்தினர் சார்ந்த இடைவேளை :**

நிகழ்ந்து கலைஞர்கள் சில இடைவேளைகளில் மது அல்லது தேநீர் அருந்துதல், புகை பிடித்தல், பார்வையாளர்களோடு உரையாடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுவர். அது அவரவர் விருப்பத்தைப் பொருத்தது. பொறாட்டு நாடகம் இரவு ஒன்பது மணிக்குத் தொடங்கி அடுத்த நாள் காலை ஆறு மணி வரை தொடர்ந்து நடைபெறும். ஆடல் முறையில் அமைந்த இந்நாடகத்தில் நிகழ்த்தினார் ஆடலும் பாடலுமாக செயல்பட வேண்டியுள்ளது. எனவே நிகழ்த்தினார்கள் சோர்வடையாமல் இருக்க அவ்வப்போது மது அருந்துதல் உண்டு. இதுபோன்று தேனீர் அருந்துதலும் இயல்பே. கேரளத்தில் கொடுங்கலூர் பகவதியாக வேடமிடம் நிகழ்த்தினார்கள் பற்றி “தெறிப்பாட்டு பாடுதல், வாளால் உடலை வெட்டிக் கொள்ளுதல், மது அருந்துதல் என்பன கேரளத்தில் பௌத்த மத பிரச்சாரத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட செயல்பாடுகளாகும் என்று பல ஆய்வாளர்கள் கூறுவதாக” (1962: 216) எஸ். கே. நாயர் குறிப்பிடுகிறார்.

**இடைவேளைகளை இட்டு நிரப்புதல் :**

கட்டியக்காரன், பபூன், கோமாளி, விதூசகன், சோதியக்காரன் என பல பெயர்களில் நாட்டார் கலைகளில் இடம்பெறும் நகைச்சுவை கதை மாந்தர் அறியப்படுகிறார். "விகடனை ஒரு கோமாளி என்று விளம்புவார் தெரியாதவர்கள் வித்துவான்கள் கர்வம் மட்டந் தட்ட வந்த வீரனா மென்பார் தெரியாதவர்கள்" (1967: 201) என்று கட்டியக்காரன் பற்றி குறிப்பிடுகிறார் சங்கரதாஸ் சுவாமிகள். "அரசனுக்கு கட்டியம் கூறும் பணியை அவன் செய்வதால் கட்டியங்காரன் என்னும் பெயர் பெற்றுள்ளான் ஆயினும் நாடகத்தில் அவன் ஆற்றும் பணிகள் பலவாக உள்ளன" (1979:285) என்கிறார் ஏ.என். பெருமாள்.

நிகழ்த்து கலைகளில் இடம்பெறும் இடைவேளைகளை பார்வையாளர்கள் உணராமலும் உணர்ந்தால் அச்சுழலை சலிப்பின்றி எதிர்கொள்வதற்கு ஏற்றபடி நகைச்சுவை தரும் பல்வேறு செயல்களைச் செய்தல், பேசுதல் என இவர் திறம்பட செயல்படுவார். "மேடை நாடகத்தில் முக்கிய கதாபாத்திரங்கள் உடை மாற்ற வேண்டிய போது, மேடை அமைப்பு மாற்றப்பட வேண்டியபோது கோமாளி மேடையின் முன்பகுதிக்கு வந்து நகைச்சுவை நிகழ்வைச் செய்வார். இந்த நகைச்சுவை பகுதி கதையோடு ஒட்டி இருக்க வேண்டியதில்லை. ஆனாலும் மக்கள் இதனை மரபின் அம்சமாக ஏற்றனர், ரசித்தனர். இந்த அம்சத்தையும் சினிமா கையில் எடுத்துக்கொண்டது. சினிமாவில் இந்தப் பண்பு தனி நகைச்சுவை காட்சிகளாக இணைக்கப்பட்டன. முக்கிய கதையோடு எந்தவித பொருத்தமும் இல்லாத நகைச்சுவைச் சரடாக இது சேர்க்கப்பட்டது" (கட்டி: 31).

**பின்பாட்டுகாரர்கள் :**

நிகழ்த்துதல்களில் உருவாகும் இடைவேளைகளை இட்டு நிரப்புவதில் பின்பாட்டுக்காரர்களுக்கு மிக முக்கியப் பங்களிப்பு உண்டு. சூழலுக்கு ஏற்றபடி நிகழ்த்துனர் பாடிச் சென்ற பாடல் வரிகளையே மீண்டும் மீண்டும் பாடுவர். சில நேரங்களில் ஹார்மோனியம், தபேலா போன்ற இசைக்கருவிகளில் இசையை மீட்டுவர். இவை இரண்டும் அல்லாத நீண்ட இடைவேளைகள் ஏற்படும்பொழுது பின் பாட்டுக்காரர்களில் திறமை மிக்க பாடகர்கள் திரை இசைப் பாடல்களைப் பாடுவர். "நாடகத்திற்கு தொடர்பில்லாத பாடல்களும் நிகழ்வில் வந்து உட்புகுந்தன. இனத்தலைவர்கள், சாதித்தலைவர்கள் குறித்த மிகுதியான பாடல்களும் நாடகத்திற்கிடையே இசைக்கப்பட்டன" (2011: 26). பார்வையாளர்களும் பாடகர்களாக பங்கேற்பதுண்டு. சில நிகழ்த்துதல்களில் இடைவேளைகளை இட்டு நிரப்ப/ சமன் செய்ய அறிவிப்புகளோ, நன்கொடை பற்றிய குறிப்புகளோ இடம்பெறுவதுண்டு.

**நிறைவாக:**

இடைவேளை நிகழ்த்துக்கலைகளில் பல்வேறு வகைமைகளில் உருவாக்கப்படுவதும், அவ்வேளை இன்ன பிற நிகழ்வுகளால் இட்டு நிரப்பப்படுவதும் இயல்பான ஒன்று. சமயம் சார்ந்த சடங்குகளில் தன்னை இணைத்துக் கொள்வதும், சமூகத்தில் இயங்குவதுமான நிகழ்த்துகலைகளுக்கு இடைவேளைகள் மிக இன்றியமையாதன.

**துணை நின்றவை:**

1. சிவசுப்ரமணியன். ஆ, 2005,நாட்டார் வழக்காற்றியல் அரசியல்,சென்னை,பரிசல்.

2. நாயர்.எஸ்.கே, 1962, கேரளத்திலே நாடோடி நாடகங்கள், மெட்ராஸ் யூனிவர்சிட்டி.

3. பார்த்திபராஜா.கி, 2011,காயாத கானகத்தே, சென்னை, ராகாஸ்.

4. பெருமாள். ஏ என், 1979, தமிழ் நாடகம் ஓர் ஆய்வு, சென்னை தமிழ் பதிப்பகம்.

5. தமிழ் நாடக மேதை தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள் நூற்றாண்டு விழா மலர், 1967, சென்னை, சங்கரதாஸ் சுவாமிகள் நினைவு மன்றம்.

6. கட்டியம்-1, காலாண்டிதழ், 2002, ஏப்ரல்-மே.